**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கீழ்பென்னாத்தூர்**
**முன்னிலை : திரு. M.C.அருண், L.L.B.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்பென்னாத்தூர்**
**2026ம் ஆண்டு ஜீன் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.60/2025**
**CNR No. TNTM24-000102-2025**

**அரசுக்காக**
காவல் உதவி ஆய்வாளர்,
கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
**குற்ற எண். 657/2018** ......**குற்றமுறையிடுபவர்**

**//எதிராக//**

1ம் எதிரி- சீத்தாராமன், வயது-38, த/பெ. பழனி,
2ம் எதிரி- அனார்கலி, வயது-35, க/பெ. சீத்தாராமன்,
(எதிரிகள் இருவரும் வசிப்பது)
சோ.நம்பியந்தல், கொல்லக்கொட்டாய், சோமாசிப்பாடி அஞ்சல்,
கீழ்பென்னாத்தூர் வட்டம்.

......**குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No. 814/2020/RG/F1ன் படியும், குற்றவியல் நடைமுறை விதிகள், 2019, விதி 106(4)ன் படியும் வழக்கின் சுருக்கம்,

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம். |
| குற்றம் சாட்டப்பட்டவர் | 1ம் எதிரி- சீத்தாராமன், வயது-38, த/பெ. பழனி,<br>2ம் எதிரி- அனார்கலி, வயது-35, க/பெ. சீத்தாராமன்,<br>(எதிரிகள் இருவரும் வசிப்பது)<br>சோ.நம்பியந்தல், கொல்லக்கொட்டாய்,<br>சோமாசிப்பாடி அஞ்சல், கீழ்பென்னாத்தூர் வட்டம். |
| நிலையக்குற்ற எண் | குற்ற எண். 657/2018 |
| குற்றம் சாட்டப்பட்டது | 1மற்றும் 2ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) -ன் கீழ் |
| குற்றச்சாட்டு | 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, |

| | |
|---|---|
| வனையப்பட்டது | 506(2) –ன் கீழும்,<br>2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டது. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 23.07.2018 |
| தெரிவிக்கப்பட்ட நாள் | 31.07.2018 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 1, 2 எதிரிகள் மாண்பமை திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் Crl.M.P.No.3077/2018, தேதி 10.08.2018 மூலம் முன்பிணை பெற்று சென்றுள்ளார். |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1, 2 எதிரிகள் மாண்பமை திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் Crl.M.P.No.3077/2018, தேதி 10.08.2018 மூலம் முன்பிணை பெற்று சென்றுள்ளார். |
| குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 10.08.2018 |
| குவிமுச பிரிவு 240 ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்ட நாள் | 13.10.2024 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 27.05.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 03.06.2026 |
| குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | அரசுத் தரப்பில் புலன் விசாரணை அதிகாரியின் சார்பில் சாட்சியம் அளிக்க கூடுதல் சாட்சியை அனுமதிக்கக் கோரி கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு M.P.No.01/2026 தாக்கல் செய்யப்பட்டு 03.06.2026 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| குவிமுச பிரிவு 294ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | அரசுத் தரப்பில் புலன் விசாரணை அதிகாரியின் சார்பில் சாட்சியம் அளிக்க கூடுதல் சாட்சியை அனுமதிக்கக் கோரி கு.வி.மு.ச. பிரிவு 294ன் கீழ் மனு M.P.No.02/2026 தாக்கல் செய்யப்பட்டு 03.06.2026 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | (see table below) |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 27.05.2026 | 27.05.2026 |
| அ.சா.2 | 27.05.2026 | 27.05.2026 |
| அ.சா.3 | 27.05.2026 | 27.05.2026 |
| அ.சா.4 | 27.05.2026 | 27.05.2026 |
| அ.சா.5 | 03.06.2026 | 03.06.2026 |

| | |
|---|---|
| குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 06.06.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| தண்டிக்கப்பட்டது | இல்லை |
| தீர்மானம் | குற்றவாளிகள் அல்லர் |
| முடிவு | 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்லர் என்று கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 03.06.2022–ம் தேதியன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம் – II, திருவண்ணாமலையில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.26/2022 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் விடுவி எண்.6035/2024, 22.11.2024ம் தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, கடந்த 01.04.2025–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில், ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.60/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத் தொடர்வுத் துறை உதவி வழக்கறிஞர் நிலை – 2, கீழ்பென்னாத்தூர், திரு. K. சங்கர், அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பாண்டுரங்கன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 06.06.2026–ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.657/2018–ல் 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, 506(2) –ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழ் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1. அரசு தரப்பு வழக்கு யாதெனில்,** இவ்வழக்கு சோ.நம்பியந்தல் கிராமம் எதிரி சீத்தாராமன் மற்றும் சாட்சி–2க்கும் நிலத்தகராறு முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 23.07.2018ம் தேதி மாலை 04.15 மணிக்கு சாட்சி–2 சேகர் என்பவர் அவரது பூந்தோட்ட நிலத்தில் 1ம்

எதிரி சீத்தாராமன் அவருக்கு சொந்தமான மாடுகளை சேகர் நிலத்தில உள்ள பொது வரப்பில் பிடித்து சென்ற போது மாடுகள் சேகர் பயிர் செய்துள்ள முல்லை பூ செடிகளை மிதித்தபடி 1ம் எதிரி நிலத்துக்கு பிடித்து சென்றுள்ளார். இதைப் பார்த்து சாட்சி–2 சேகர் ஏம்பா என் பூச்செடிகள் மீது மாட்டை ஓட்டி போர என்று கேட்டதற்கு 1ம் எதிரி அவரைப் பார்த்து ங்கோத்தா, பொட்ட தேவிடியா பையா அப்படித்தாண்டா போவேன் உன்னாலா என்னடா பன்ன முடியும் என்று அசிங்கமகா திட்டியும், 1 மற்றும் 2ம் எதிரி ஆகிய இருவரும் சாட்சி–2யை கையாலும் காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து கீழே தள்ளி துன்புறுத்தியதைப் பார்த்தை சாட்சி–3 விஜயா என்பவரையும் 1 மற்றும் 2ம் எதிரிகள் கையாலும், காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து துன்புறுத்தியும் இதைப் பார்த்த சாட்சி–1 இதை தடுத்த போது 1ம் எதிரி சாட்சி–1யை கொடுவாளால் தலை மீது வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியும், டேய் இனிமேல் எங்க கிட்ட வைச்சுகினா இந்த கொடுவாளால் வெட்டி இந்த நிலத்திலேயே புதைத்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, 506(2) –ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று கூறி கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதின் பேரில், ஆவணங்களை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கினை மேற்படி எண்ணில் கோப்புக்கு எடுத்து, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**2. எதிரிக்கு வழக்காவணங்கள் வழங்கி, குற்றங்கள் குறித்து வினவிய விவரம்:**

இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்து, இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்த வகையில், எதிரி இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால், 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, 506(2) –ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது, தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து, தாங்கள் குற்றமற்றவர்கள் என்று கூறியதால், அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.8** வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

3. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**

அ.சா.–1 ஜீவா, சோ.நம்பியந்தல் கிராமம் எதிரி சீத்தாராமன் மற்றும் சாட்சி–2க்கும் நிலத்தகராறு முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 23.07.2018ம் தேதி மாலை 04.15 மணிக்கு சாட்சி–2 சேகர் என்பவர் அவரது பூந்தோட்ட நிலத்தில் 1ம் எதிரி சீத்தாராமன் அவருக்கு சொந்தமான மாடுகளை சேகர் நிலத்தில உள்ள பொது வரப்பில் பிடித்து

சென்ற போது மாடுகள் சேகர் பயிர் செய்துள்ள முல்லை பூ செடிகளை மிதித்தபடி 1ம் எதிரி நிலத்துக்கு பிடித்து சென்றுள்ளார். இதைப் பார்த்து சாட்சி–2 சேகர் ஏம்பா என் பூச்செடிகள் மீது மாட்டை ஓட்டி போர என்று கேட்டதற்கு 1ம் எதிரி அவரைப் பார்த்து ங்கோத்தா, பொட்ட தேவிடியா பையா அப்படித்தாண்டா போவேன் உன்னாலா என்னடா பன்ன முடியும் என்று அசிங்கமகா திட்டியும், 1 மற்றும் 2ம் எதிரி ஆகிய இருவரும் சாட்சி–2யை கையாலும் காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து கீழே தள்ளி துன்புறுத்தியதைப் பார்த்தை சாட்சி–3 விஜயா என்பவரையும் 1 மற்றும் 2ம் எதிரிகள் கையாலும், காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து துன்புறுத்தியும் இதைப் பார்த்த சாட்சி–1 இதை தடுத்த போது 1ம் எதிரி சாட்சி–1யை கொடுவாளால் தலை மீது வெட்டி சொறப்பகாயம் ஏற்படுத்தியும், டேய் இனிமேல் எங்க கிட்ட வைச்சுகினா இந்த கொடுவாளால் வெட்டி இந்த நிலத்திலேயே புதைத்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளனர். பின்னர் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தனர்.

கடந்த 24.07.2018ம் தேதியன்று 17.00 மணியளில் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு. ஏகாம்பரம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரி தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜுவா, வயது 26, த/பெ. சேகர் என்பவரிடம் **அ.சா.ஆ.3** புகார் வாக்குமூலம் பெற்றும், அதில் **அ.சா.ஆ.1** புகார்வாக்குமூலத்தில் அ.சா.1னின்

கையொப்பம் பெற்றும், 18.00 மணிக்கு நிலையம் சேர்ந்து நிலைய சி.எஸ்.ஆர்.எண்.215/2018யை பதிவு செய்துள்ளார். பின்னர் 31.07.2018ம் தேதியன்று 18.00 மணியளவில் இவ்வழக்கை உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவர் மேற்படி புகார் மனுவினையும், சி.எஸ்.ஆரையும் தனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண்.657/2018, ச/பி 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வின்படி **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் மறுநாள் 01.08.2018ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான சோ.நம்மியந்தல் கிராமம் சேகர் நிலத்திடம் சென்று சாட்சிகள் பச்சையப்பன், பவுன்குமார் என்பவரிடம் **அ.சா.ஆ.2** பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் பெற்றும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.5** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.6** மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகள் ஜீவா, சேகர், விஜயா, செல்வம், குமாரி, வெண்ணிலா, பச்சையப்பம் மற்றும் பவுன்குமார் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணை மூலமும் தனது விசாரணையின் மூலமும் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரிகள் சீத்தாராமன் மற்றும் அனார்கலி ஆகியோர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் முன்பிணை உத்தரவின் பேரில் எதிரிகள் பிணையில் சென்றதை அறிந்து 1, 2 எதிரிகளை கைதுசெய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 ஜீவா என்பவருக்கு திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையளித்த

மருத்துவர்.திரு.அருண்குமார் என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.7** விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவரின் விசாரணை மூலமும், சாட்சிகளின் விசாரணை மூலமும் அ.சா.1யை 1ம் எதிரி கொடுவாளால் தலை மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், அ.சா.2யை 1 மற்றும் 2 எதிரிகள் கையாலும் காலாலும் அடித்து உதைத்தாகவும், விசாரணையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் ச/பி இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வில் என்பதில் இருந்து ச/பி. இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 352, 506(2) இ.த.ச.என சட்டப்பிரிவு மாற்றம் செய்து **அ.சா.ஆ.8** சட்டப்பிரிவு மாற்று அளிக்கையை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை ஆகும். இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை 10.08.2018ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வருவது யாதெனில்,

(4.1) **அ.சா. 1 –ஜீவா,** தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது குன்னியந்தல் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை என்றும், மாலை 04.30 மணியளவில் தானும்

தனது அப்பா சேகரும், தனது அம்மா விஜயாவும் தங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தானும், தனது அம்மாவும், அப்பாவும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தான்கீழே விழுந்ததில் தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அப்பாவும், அம்மாவும் கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், கூட்டத்தில் இருந்த அடையாளம் தெரியாத நபர்கள் தனது அப்பாவையும், அம்மாவையும் கையால் தாக்கினார்கள் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே இருந்த நிலப்பிரச்சனை காரணமாக சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம்காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தனக்கு தெரியாது என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.2) **அ.சா.2 – சேகர்**, தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், அ.சா.1 தனது மகள் ஆவார் என்றும், கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை என்றும், மாலை 04.00 மணியளவில் தானும் தனது மகள் ஜீவா மற்றும் தனதுமனைவி விஜயாவும் ஆகியோருடன் தங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட

நபர்கள் கூட்டமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தானும், தனது மனைவியும், மகளும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தான்கீழே விழுந்ததில் தனக்கு உடம்பில் அடிப்பட்டது என்றும், தனக்கும், தனது மகளுக்கும் கீழே விழுந்து அவருக்கு தலையிலும் தனது மனைவி விஜயாவுக்கு உடம்பிலும் காயம் ஏற்பட்டது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.3) **அ.சா. 3 – விஜயா**, தனது சாட்சியத்தில், தான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், அ.சா.1 தனது மகள் ஆவார் என்றும், அசா2 தனது கணவர் ஆவார் என்றும், கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை என்றும், மாலை 04.00 மணியளவில் தானும் தனது மகள் ஜீவா மற்றும் தனது கணவர் சேகர் ஆகியோருடன் தங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டமாக நின்று சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தனது கணவரும், தனது மகளும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தன் கணவர் கீழே விழுந்ததில் அவருக்கு உடம்பில் அடிப்பட்டது என்றும், தனக்கும், தன் கணவருக்கும், தனது மகளுக்கும் கீழே விழுந்ததில் தனது மகளுக்கு தலையிலும், தனக்கு உடம்பிலும் காயம் ஏற்பட்டது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.4) அ.சா.4 – பவுன்குமார், தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து பூ அறுவடை செய்து பூ வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், சாட்சி 7 பச்சையப்பன் என்பவரை தெரியும் தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அது **அசாஆ2** ஆகும் என்றும், கடந்த 2018ம் ஆண்டு ஒருநாள் தேதி, மாதம் நினைவில்லை பகல் 11 மணியளவில் தான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் ஒரு வேலையாக சென்றிருந்தபோது போலிசார் தன்னிடம் வெள்ளைதாளில் கையொப்பம் கேட்டார்கள் தான் போட்டேன். எந்த வழக்கிற்காக தான் கையொப்பம் செய்தேன் என்று தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.5) அ.சா.5 – செந்தில் குமார், சிறப்பு உதவி ஆய்வாளர், தன்னுடைய சாட்சியத்தில், தான்தற்போது கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் விசாரணை அதிகாரி திரு. ரவிசந்திரன் உதவி ஆய்வாளர் பணியிடமாறுதலில் சென்றுவிட்ட காரணத்தாலும் மேற்படி விசாரணை அதிகாரியின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி துரிதமாக விசாரணையை முடிக்க வேண்டும் என்பதாலும், தான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 24.07.2018ம் தேதியன்று 17.00 மணியளில் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு. ஏகாம்பரம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த

போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரி தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜுவா, வயது 26, த/பெ. சேகர் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 18.00 மணிக்கு நிலையம் சேர்ந்து நிலைய சி.எஸ்.ஆர்.எண்.215/2018யை பதிவு செய்துள்ளார் என்றும், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும் என்றும், பின்னர் 31.07.2018ம் தேதியன்று 18.00 மணியளவில் இவ்வழக்கை உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவர் மேற்படி புகார் மனுவினையும், சி.எஸ்.ஆரையும் தனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண்.657/2018, ச/பி 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும் என்றும், பின்னர் மறுநாள் 01.08.2018ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான சோ.நம்மியந்தல் கிராமம் சேகர் நிலத்திடம் சென்று சாட்சிகள் பச்சையப்பன், பவுன்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆகும் என்றும், பின்னர் சம்பவ சாட்சிகள் ஜீவா, சேகர், விஜயா, செல்வம், குமாரி, வெண்ணிலா, பச்சையப்பம் மற்றும் பவுன்குமார் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணை மூலமும் தனது விசாரணையின் மூலமும் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரிகள் சீத்தாராமன் மற்றும் அனார்கலி ஆகியோர் மாவட்ட அமர்வு

நீதிமன்றத்தின் முன்பிணை உத்தரவின் பேரில் எதிரிகள் பிணையில் சென்றதை அறிந்து 1, 2 எதிரிகளை கைதுசெய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 ஜீவா என்பவருக்கு திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர்.திரு.அருண்குமார் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும் என்றும், அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவரின் விசாரணை மூலமும், சாட்சிகளின் விசாரணை மூலமும் அ.சா.1யை 1ம் எதிரி கொடுவாளால் தலை மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், அ.சா.2யை 1 மற்றும் 2 எதிரிகள் கையாலும் காலாலும் அடித்து உதைத்தாகவும், விசாரணையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் ச/பி இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.வில் என்பதில் இருந்து ச/பி. இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 352, 506(2) இ.த.ச.என சட்டப்பிரிவு மாற்றம் செய்துள்ளார் என்றும், அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும் என்றும், இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை 10.08.2018ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5. **எதிரியிடம் குற்றம் குறித்து வினவுதல்,**

அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.5 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு

பாதகமான பகுதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு, பொய் சாட்சியம் என மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது.

**6. அரசுத் தரப்பு வாதம் என்னவென்றால்,**

அரசுத்தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின் போது இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் **அ.சா.1** முதல் **அ.சா.5** வரையான சாட்சிகள் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.8** வரையான சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.1ன் சாட்சியத்தை மற்ற சாட்சிகள் ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் தடய பொருளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்றும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

**7. எதிரிகள் தரப்பு எதிர்வாதம் என்னவென்றால்,**

எதிரிகளின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அ.சா.1க்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில், எதிரியை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளதாகவும், மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் இருந்து சுமார் 8 நாட்கள் காலதாமதமாக அ.சா.1ன்னு கொடுத்த பொய்யான புகாரை பெற்று சரிவர

புலன்விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

8. அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, 506(2) –ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை எவ்வளவு என்பதேயாகும்.

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**10. கேள்வி 1 அரசு தரப்பு சொல்வதுபோல் 1, 2 எதிரிகள் அ.சா.2யை அசிங்கமாக பேசி, அ.சா.1யை கொடுவாளால் தாக்கி சொற்பகாயத்தினை ஏற்படுத்தியும், அ.சா.2 மற்றும் அ.சா.3யை கையால் அடித்தும் குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்த குற்றசாட்டுகளான இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 352, 506(2)– கீழ் குற்றவாளியா?**

(10.1) மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், கடந்த 23.07.2018ம் தேதி மாலை 04.15 மணிக்கு சாட்சி–2 சேகர் என்பவர் அவரது பூந்தோட்ட நிலத்தில் 1ம் எதிரி சீத்தாராமன் அவருக்கு சொந்தமான மாடுகளை சேகர் நிலத்தில உள்ள பொது வரப்பில் பிடித்து சென்ற போது மாடுகள் முல்லை பூ செடிகளை மிதித்ததால் சாட்சி–2 சேகர் ஏம்பா என் பூச்செடிகள் மீது மாட்டை ஓட்டி போர என்று கேட்டதற்கு 1ம் எதிரி அவரைப் பார்த்து ங்கோத்தா, பொட்ட தேவிடியா பையா அப்படித்தாண்டா போவேன் உன்னாலா என்னடா பன்ன முடியும் என்று அசிங்கமகா திட்டியும், 1

மற்றும் 2ம் எதிரி ஆகிய இருவரும் சாட்சி–2யை கையாலும் காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து கீழே தள்ளி துன்புறுத்தியதைப் பார்த்தை சாட்சி–3 விஜயா என்பவரையும் 1 மற்றும் 2ம் எதிரிகள் கையாலும், காலாலும் உடல் முழுவதும் அடித்து உதைத்து துன்புறுத்தியும் இதைப் பார்த்த சாட்சி–1 இதை தடுத்த போது 1ம் எதிரி சாட்சி–1யை கொடுவாளால் தலை மீது வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் கொடுத்துள்ளார். ஆனால் அ.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில், கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை என்றும், மாலை 04.30 மணியளவில் தானும் தனது அப்பா சேகரும், தனது அம்மா விஜயாவும் தங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தானும், தனது அம்மாவும், அப்பாவும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தான்கீழே விழுந்ததில் தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அப்பாவும், அம்மாவும் கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும், கூட்டத்தில் இருந்த அடையாளம் தெரியாத நபர்கள் தனது அப்பாவையும், அம்மாவையும் கையால் தாக்கினார்கள் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே இருந்த நிலப்பிரச்சனை காரணமாக சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும் அரசுத் தரப்பிற்கு ஆதரவின்றி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

(10.2) மேலும் சம்பவத்தின் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றம் அ.சா.3ம் தங்களது முதன்மை சாட்சியத்தில், கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை என்றும், மாலை 04.00 மணியளவில் தாங்கள் தங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தாங்கள் மூவரும் கூட்டத்தில் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் எங்கள் மூவருக்கும் உடம்பிலும் காயம் ஏற்பட்டது என்று அரசுத்தரப்பிற்கு ஆதரவின்றி பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் இவ்வழக்கில் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4–பவுன்குமார் என்பவர் தனது விசாரணையில் கடந்த 2018ம் ஆண்டு ஒரு நாள் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் ஒரு வேலையாக சென்றிருந்த போது போலிசார் தன்னிடம் வெள்ளைத் தாளில் கையொப்பம் கேட்டார்கள் என்றும் தான் போட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், கீழ்பென்னாத்தூர் காவல் துறையினர் சம்பவயிடம் சென்று வழக்கைக் குறித்து விசாரித்தார்களா என்பதே சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(10.3) அரசுத் தரப்பில் விசாரணை அதிகாரியான திரு.ரவிச்சந்திரன் என்பவருக்கு பதிலாக தற்போது பணிபுரிந்து வரும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செந்தில் குமார் அவர்களை ஆவணங்களின் அடிப்படையில் பிரிவு 311 கு.வி.மு.ச.வின் கீழ் உதவி ஆய்வாளர் மூலமாக அரசு தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவும், பிரிவு 294 கு.வி.மு.ச.வின்

கீழ் மருத்துவ ஆவணங்கள் குறியீடு செய்யவும் மனுதாக்கல் செய்யப்பட்டு எதிர் தரப்பில் ஆட்சேபணை ஏதும் இன்றி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு கூடுதல் சாட்சியாக மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செந்தில் குமார், இந்நீதின்றத்தில் ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி ஆறுமுகம் அவர்களின் புலன் விசாரணையான புகார் வாக்குமூலம் பெறுதல், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மாதிரி வரைபடம் மற்றும் சம்பவ சாட்சிகள் ஆகியோரை விசாரணை செய்தது குறித்தும், மருத்துவரிடம் காயச்சான்றுகள் பெற்றது குறித்தும், இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமாக இந்நீதிமன்றத்தில் அளித்துள்ளார்.

(10.4) மேற்படி கூடுதல் சாட்சி அ.சா.5 அரசு தரப்பு வழக்கினை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்திருந்தாலும், இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களே பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகள் தான் குற்றவாளிகள் என கருதமுடியாது என இந்நீதிமன்றம் எதிரிகளை விடுதலை செய்கிறது.

**11. முடிவில்,** அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததில், 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 352, 506(2) –ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 352–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என 1, 2 எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

எதிரிக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பிணை ஆவணங்கள் மேல் முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

12. இவ்வழக்கின் வழக்கு சொத்து ஏதும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 10.06.2026 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ARUN M C

Digitally signed by ARUN M C
Date: 2026.06.10 13:40:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

அ.சா.1 – ஜீவா

அ.சா.2 – சேகர்

அ.சா.3 – விஜயா

அ.சா.4 – பவுன்குமார்

அ.சா.5 – செந்தில் குமார் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

அ.சா.ஆ.2 – பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்

அ.சா.ஆ.3 – புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | – | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | – | விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.8 | – | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

| | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்று பொருட்கள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சாட்சிகள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள்** | : | இல்லை |

ARUN M C

Digitally signed by ARUN M C
Date: 2026.06.10 13:40:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

**<u>பின் குறிப்பு:</u>**

1. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
2.வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.